கழக முன்னோடி

# மாயூரம் காந்தி கருணாநிதி மறைவு!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 6 –

கழக முன்னோடி – முனைவர் – காந்தி கருணாநிதி அவர்கள், நேற்று முன்தினம் (4.3.2025–செவ்வாய்க்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது மறைவுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

திராவிட இயக்கப் போராளி காருகுடி சின்னையா அவர்களின் பேரன் – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் இளமைக் காலத்தில், அவரது உற்ற நண்பர்களில் ஒருவராக விளங்கிய மாயூரம் இ.காந்தி அவர்களின் புதல்வர்– கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்ட முனைவர் காந்தி கருணாநிதி அவர்கள், உடல்நலக்குறைவால், நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

‘ஆவின்’ நிறுவனத்தில் அதிகாரியாக அவர் பணியாற்றி வந்தபோதும், கழக நிகழ்ச்சிகளிலும் – தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டங்களிலும் , நான் பங்கேற்கும் நிகழ்கவுளிலும் தவறாமல் காந்தி கருணாநிதி தென்படுவார் எனக் கூறிடும் அளவுக்கு, கழகக் கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்டவராக விளங்கியவர் அவர். பணி ஓய்வுக்குப் பிறகு முன்னினும் தீவிரமாக கழகப் பணியாற்றி வந்தார்.

தமது தந்தை வழியில், கழகத்தில் பெரும் பற்றும், பிடிப்பும், ஈடுபாடும் கொண்டு கழகப் பணியாற்றி வந்த முனைவர் காந்தி கருணாநிதி அவர்களின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கழகத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழக தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு இராணிப்பேட்டை விஸ்வாஸ் பள்ளியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் விஸ்வாஸ் பள்ளி தலைவர் கமலா காந்தி. ஆகியோர் ஊனமுற்ற குழந்தைகளோடு கேக் வெட்டி அறுசுவை உணவு வழங்கினார்கள். இதில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், Dr.இராஜேஸ்வரி திருமதி.ஷீலா வினோத் காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை, மஸ்தான், குமுதா, குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகரச் செயலாளர்கள் பி.பூங்காவனம், எம்.கோபி, பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், மாவட்டப் பிரதிநிதி எஸ்.கிருஷ்ணன், நகர துணை செயலாளர்கள் ஏர்டெல் குமார், வையாபுரி நகர பொருளாளர் ஏ.அமீத் நகர மன்ற தலைவர்கள் சுஜாதா வினோத் ஹரிணி தில்லை, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் யுவராஜா மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

# அனைத்திலும் முதல்வன் நீ!



முதல்வர் நீ!
அனைத்திலும் முதல்வர் நீ!
தலைவர் நீ!
கூட்டணிக் கட்சிக்கெல்லாம் தலைவர் நீ!
கலைஞரின் உடன்பிறப்புகளுக்கெல்லாம் தலைவர் நீ!
கொள்கையில் பெரியார் நீ!
அடக்கத்தில் அண்ணா நீ!
கொள்கைப் பரப்பில் கலைஞர் நீ!
எமைப்போன்றோர்க்கெல்லாம் எல்லாமும் நீ!
மாணவர்களுக்கு அப்பா நீ!
நான் முதல்வன் திட்டம் தந்தவனல்லவா!,
இளைஞர்களுக்கு வழிகாட்டி நீ!
தமிழ்ப்புதல்வன் திட்டம் தந்தவனல்லவா!,
மகளிர்க்கெல்லாம் அண்ணன் நீ!
மகளிர் உரிமைத் தொகை தந்தவனல்லவா!,
முதியோர்க்கெல்லாம் பிள்ளை நீ!
ஓய்வூதியம் தந்தவனவல்லவா!,
நோயுற்றோர்க்கெல்லாம் தாயுமானவன் நீ
மக்கள் மருந்தகம் தந்தவனல்லவா!,
கிறித்தவர் ஜெருசலேம் செல்ல நிதி உதவி தந்து,
கிறித்தவர்களின் தோழன் ஆனாய்!
இஸ்லாமியர்க்கு ஹஜ் இல்லம் தந்து,
இஸ்லாமியருக்கு இணக்கமான சகோதரன் ஆனாய்!
சைவ, வைணவ ஆயிரக்கணக்கான ஆலயங்களுக்கு
குடமுழுக்கு செய்து ஆன்மீகவாதிகளின் அன்பனானாய்!

தங்க இடம் இல்லாதோருக்கு
மனை தந்தாய்,
இல்லம் இல்லாதோர்க்கு
கலைஞர் கனவு இல்லம் தந்தாய்,
சீர்மரபினர் சமுதாயத்திற்கு
ஓய்வூதியமும், கல்வி ஊக்கத் தொகையும் தந்து
வாரியத்திற்கு என்னை
துணைத் தலைவராக்கி
நிதியும் தந்து வாரியத்தை
செம்மையாய் செயல்பட வைத்தாய் !
யாருக்கு நீ கொடுக்கவில்லை
அள்ளிக் கொடுப்பதில் கர்ணனாய் நீ
உலகத் தமிழினம் காக்கும் காவலனாய் நீ!
வாழும் கலைஞராய் நீ!
இனமானப் பேராசிரியராய் நீ!
காலம் கருதி கழகம் காக்க
உதயநிதியைத் தந்த தந்தையாய் நீ!
தமிழ் காக்க இனம் காக்க வாழ்கவே!
எம்மான் நீ வாழ்கவே!!
அருள் மேவும் ஆதவனே!
அன்பு செய்யும் காவலனே!
இணை ஏதும் இல்லாத
எமை ஆளும் தூயவனே!
ஆட்சித் தலைவனே! ஆருயிர் அண்ணனே!
வாழ்க! வாழ்க!!
பாசிசம் ஒழித்து பெரியாரியம் ஓங்க
பல்லாண்டு! பல்லாண்டு!! பல்லாயிரத்தாண்டு!!!
பார்போற்ற வாழ்க!!



**இராசா அருண்மொழி**
தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரிய
துணைத் தலைவர் -
விருதுநகர் தெற்கு மாவட்ட
துணைச் செயலாளர்

## தந்தை பெரியார் மீது பெரும் பற்று – பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பு –

# தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவர், கவிஞர் நந்தலாலா!

## மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 6-

“தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள்!’’ என்று, அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பி ட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

தமிழ்நாட்டின் புத்தகத் திருவிழாக்கள், முற்போக்கு மேடைகள், தொலைக்காட்சி விவாதங்கள், பட்டிமன்றங்கள் எனக் கவிஞர் நந்தலாலா அவர்களின் குரல் ஒலிக்காத மேடையே இல்லை எனும் அளவுக்கு அனைத்து உணர்ச்சிகளையும், அரிய தகவல்களையும் தமது பேச்சில் வெளிப்படுத்தும் திறம் பெற்றவர் அவர்.

காவிரிக்கரையின் மைந்தனான கவிஞர் நந்தலாலா அவர்கள் தமது ஊரான திருச்சியின் மீது கொண்ட தீராக்காதலுக்கு, “திருச்சிராப்பள்ளி: ஊறும் வரலாறு” நூலே சான்றாகும்.

அவரது ஆற்றல் தமிழ்ச் சமூகத்துக்கு மேலும் பயனளிக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் அவரை நியமித்திருந்தோம் என்பது குறிப்பி டத்தக்கது.

தந்தை பெரியார் மீது பெரும் பற்றும், பேரறிஞர் அண்ணா மீது பெருமதிப்பும், தலைவர் கலைஞர் மீது மிகுந்த அன்பும் கொண்டிருந்தவர் கவிஞர் நந்தலாலா அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் குறித்து, “தாம் வாழ்ந்த காலம் முழுதும், மானமும் அறிவும்; துணிச்சலும் செயலுமாக வாழ்ந்தவர் கலைஞர். உரிமை மீட்புப் போரில் அவரே நமக்கு என்றும் போர்வாள்” என்று உண்மை இதழில் அவர் எழுதிய சொற்களை மறக்க முடியாது. என் மீதும் மிகுந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார். எனது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு பரந்த மனத்தோடும் அன்போடும் வாழ்த்திப் பேசியதையும் இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.

மேலும் பல்லாண்டுகள் தமிழ்ச் சமூகத்துக்கு அருந்தொண்டாற்றவிருந்த அவர் மறைந்துவிட்டார் என்பது வேதனையளிக்கிறது. அவரை இழந்து வாடும் அவர்தம் குடு ம்பத்தினருக்கும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் தோழர்களுக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்களின் குழுத் தலைவர் ஏ.பி.நந்தகுமார்

# திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் ஆய்வு!

## அமைச்சர் க.பொன்முடி – செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு!

விழுப்புரம், மார்ச் 6 -

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் தொழில் பூங்காவில் இயங்கி வரும்செய்யார் சிஸ் டெவலப்மென்ட் தொழில் நிறுவனத்திலும், நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்களின் குழு தலைவர் நந்தகுமார், வனம் மற்றும் காதி கிராமத் தொழில் வாரிய துறை அமைச்சர் க. பொன்முடி, தலைமையில் தமிழ்நாடு சட்டமன்ற பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் துரை சந்திரசேகர், மு.பெ.கிரி, சிந்தனைச் செல்வன், சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர்சீனிவாசன்,பேரவை இணை செயலாளர்தேன் மொழி, ஆகியோர் உள்ளடங்கிய குழுவினர் திண்டிவனம் சிப்காட்டில் இயங்கி வரும் தொழில் நிறுவ னங்களைஆய்வு செய்தனர்.

அப்போது நிறுவனத்தில் மேற்கொள்ளக்கூடியஉற்பத்தி பொருள்கள் குறித்து கேட்டறிந்தனர். இதைத் தொடர்ந்து நிறுவன த்தில் தயாரிக்கப்படும் பொருட்களைபார்வையிட்ட குழுவினர் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களிடத்தில் குறைகளை கேட்டு அறிந்தனர்.

இதைத்தொடர்ந்து திண்டிவனம் அரசு கலைக் கல்லூரி எதிரில் தாட்கோ திட்டத்தின் மூலம் 5. 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசுஆதிதிராவிடர் மாணவர் விடுதியை இக்குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது அரசு மாணவர் விடுதியை தரமாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென அவர்கள் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வின் போது விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தரணிவேந்தன், மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான், சார் ஆட்சியர் திவ்யான் ஷு நிகழ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி,மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்,ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், மணிமாறன், ராஜாராமன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க துணைத் தலைவர்

# கவிஞர் நந்தலாலா மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, மார்ச் 6 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா (வயது 69) அவர்கள் 04.03.2025 அன்று உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன். அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் இரங்கல் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி ஊராட்சி கழக முன்னோடி நினைவில் வாழும் சுப்பிரமணியன் அவர்களின் மனைவி அஞ்சலை அம்மாள் மறைவையொட்டி விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அம்மையாரின் குடும்பத்தினர் மணிகண்டன், பானுப்பிரியா, வசந்தி, பிரபா, இளங்கோமணி ஆகியோருக்கு ஆறுதல் கூறினார். உடன் நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி.அண்ணாதுரை, நாரையூர் மாரிமுத்தாள், குணசேகரன், தீயணைப்புத் துறை ஓய்வு பெற்ற அலுவலர் எம்.சக்கரபாணி, கிளை செயலாளர் எம்.வேல்முருகன் மற்றும் தோழமைக் கட்சியினர் சி.மணிகண்டன், வீரா.பெரியசாமி, சுதா, வேல்முருகன், வி.ரவி உள்ளிட்டோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.



முதல்வர், கழகத் தலைவர் ”தளபதியார் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பத்தூர் நகர கழக செயலாளர் வழக்கறிஞர் சு.இராசேந்திரன் தலைமையில், திருப்பத்தூர் நகரம் வீட்டு வசதி வாரியம் காந்தி சிலை அருகாமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர் மங்கலம் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நலத்திட்ட உதவிகளும் வழங்கினர். கூட்டத்தில். மாவட்டக் கழக பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ரகுநாத், சு.அரசு, நகர மன்ற தலைவர் வி.சங்கீதா வெங்கடேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் க.முருகேசன், கே.ஏ.குணசேகரன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.வடிவேல், அரசு வழக்கறிஞர்கள் பி.டி.சரவணன், எம்.ராஜா, நகர பொருளாளர் வி.மகாலிங்கம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சார்லஸ், நதிம்,ராஜா, தாமோதரன், பிரேம்குமார், ரமேஷ், நகர மன்ற உறுப்பினர்கள் கோபிநாத், செல்வி மற்றும் மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் , பண்ருட்டி தொகுதி, அண்ணா கிராம ஒன்றியத்தில் , 15 ஊராட்சிகளில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடியேற்றியும், இனிப்புகள், நலத்திட்டங்கள், அன்னதானம் வழங்கியும், உறுதிமொழி ஏற்றனர். அண்ணா கிராம ஒன்றிய செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.கே.வெங்கடராமன் தலைமையேற்று வழங்கினார். கழக பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன், மாவட்டப் பிரதிநிதி இராமு ராமச்சந்திரன், ஒன்றிய பொருளாளர் ஜிகே.ஸ்ரீதர், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி மற்றும் தகவல் தொழில் நுட்ப அணிகள், கழக முன்னோடிகள், தொண்டர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.